வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 18 of 2019

வழக்கு சாட்சி - PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆம்ரோஸ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ஏசையன் | வயது | : | |
| கிராமம் | : | குள்ளம்பாளையம் கேத்தனூர் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.02.2026.

(எதிரி ஆஜர்.).

**முதல் விசாரணை :** **நாள் : 17.02.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கம்பெனி வேலை செய்து வருகிறேன். 29.11.2017 ஆம்தேதி இரவு 7.15 மணியளவில் செட்டிபாளையம் ரோட்டில் அண்ணை வேளாங்கனி சர்ச்சிற்கு அருகில் நானும் என் தங்களை மகன் ஜான் பால் என்பவரும் ஒரு நிகழ்ச்சிக்காக வந்துக்கொண்டிருந்தோம் அப்போது வழக்கில் இறந்துபோன அந்தோனி எனக்கு போன் செய்து நானும் நிகழ்ச்சிக்காகவந்துக்கொண்டிருக்கிறேன் அங்கு காத்திருங்கள் என்று சொன்னார் நானும் ஜான்பாலும் சர்ச்சிற்கு வெளியில் உள்ள காம்பவுண்டுக்கு அருகில் நின்றுக்கொண்டிருந்ததோம் அப்போது அந்தோனி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து வந்து ரோட்டை கடந்து தெற்கு வந்தபோது TN 33 N 2587 என்ற 30 நம்பர் பேருந்து வேகமாக வந்து என் தம்பி அந்தோனி மீது மோதி 100 மீட்டர் தூரம் தள்ளி சென்று நின்றது. நாங்கள் போய் பார்த்தப்போது கை „இடுப்பு தலை ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. நாங்கள் உடனே பல்லடம் அரசு மருத்துவமனை அழைத்து வந்ததோம் அங்கு மருத்துவர்

பரிசோதித்து இறந்துவிட்டதாக கூறினார். ஆஜர்எதிரிதான் விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுநர் ஆவார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1)ஜான் பால் எங்கிருந்து நிகழ்ச்சிக்கு வந்தார் என்றால் எலவந்தி வடுகபாளையத்தில் வந்தார். நான் வந்த பின்னிட்டு வந்தார் அல்லது எனக்கு முன் வந்தாரா என்றால் நான் வந்த பிறகு 10 நிமிடங்கள் கழித்து வந்தார். ஜான் பால் எந்த வாகனத்தில் வந்தார் என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தார். நான் சர்ச்சிற்கு பக்கத்தில் எவ்வாறு சென்றேன் என்றால் பல்லடம் பஸ் ஸ்டேன்டில் இருந்து ஆட்டோபிடித்து அங்கு சென்றேன். நான் மற்றும் ஜான் பால் எவ்வளவு நேரம் அந்த இடத்தில் அந்தோனி வருவதற்காக காத்திருந்தோம் என்றால் 10 நிமிடங்கள் இருக்கும். ஏற்கனவே அந்தோனி வந்து பின்பு நிகழ்ச்சிக்கு ஒன்றாக செல்லலாம் என்று போன் மூலம் சொல்லியிருந்தார் என்றால் சரிதான்.

2) நான் மற்றும் ஜான்பால் நிகழ்ச்சிக்கு செல்லவில்லை என்றால் சரிதான். அந்த சாலை என்பது வாகனங்கள் செல்லும் இருவழி சாலை என்றால் சரிதான் ரோட்டின் மத்தியில் தடுப்பு சுவர் உள்ளது. கிழக்கில் இருந்து மேற்கே ரோட்டின் எந்த புறத்தில் இருந்து வந்தார் என்றால் என்றால் சாலையின் வடபுறத்தில் இருந்து வந்தார். ரோட்டை வடக்கிருந்து தெற்காக கடக்கும்போதுதான் விபத்து நடந்து என்றால் சரிதான். அப்போது இரவு நேரம் என்றால் 7.15 மணி இருக்கும். அந்த ரோடு வாகன போக்குவரத்து அதிகம் உள்ள ரோடு என்றால் சரிதான். யாருடைய நிகழ்ச்சி அங்கு நடந்தது என்றால் திண்டுகலை சேர்ந்த நபரின் நிகழ்ச்சி நடந்தது.

3) நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் நான் மற்றும் ஜான் பால் ஆகியோர் விபத்து நடந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்திற்கு பின்னிட்டு விபத்து பற்றி கேள்விப்பட்டு விபத்தில் அடிப்பட்டவர் என் உடன் பிறந்த சகோதரர் என்பதால் நஷ்ட ஈடு

பெற வேண்டி போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பின்னர் விவரம் கேட்டு தெறிந்து சம்பவத்தை கண்ணுற்றதாக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். பின்னர் தான் நான் பேருந்தின் ஓட்நர் பெயரை நான் கேட்டு தெறிந்துக்கொண்டேன் என்றால் அவர் பெயர் எனக்கு தெரியாது.

4) என்னை விசாரித்த போலீஸ் அதிகாரியிடமும் ஓட்டுநர் பெயர் தெரியாது என்று தான் சொன்னேன் என்றால் சரிதான். நெடுஞ்சாலையை இருபுறம் செல்லும் வாகனத்தை கவனிக்காமல் சாலையை அஜாக்கிரதையாக கடக்கும்போது விபத்து ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு உடன் சென்றேன் என்றால் நான் மற்றும் ஜான் பால் மற்றும் உடன் வேலை செய்த நபர்கள் சென்றோம். மருத்துவர் என்னிடம் என்ன நடந்தது என்று விசாரித்தாரா என்றால் விசாரித்தார். மருத்துவரிடம் விபத்து எப்படி நடந்தது என்று யார் சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியாது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.02.17 18:42:15 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.